# தேவனுடைய புதிய அரசு

*மனித குலத்தின் மத்தியில் தேவனுடைய அரசை வேதாகம மாணவர்கள் மூன்று தனிச்சிறப்பான யுகங்களில் காணுகின்றார்கள் - அவை பிதாக்களின் யுகம், யூதத்துவ யுகம், கிறிஸ்தவ யுகம் ஆகும். தேவன் மக்களுடன் வித்தியாசப்பட்ட மூன்று "யுகங்களில்" தமது சித்தம் மற்றும் கிருபையினால் செயல்பட்டதை வரலாற்றின் மூன்று யுகங்களுக்கான பழக்கப்பட்ட இச்சொற்றொடர்கள் குறிப்பிடுகின்றன.*

*"பிதாக்களின்" என்பது தேவன் குடும்பங்களுடன் செயல் புரிந்த காலம் மற்றும் வழிமுறையைக் குறிக்கின்றது. தேவன் (இக்குடும்பங்களின்) தகப்பனாருடன் செய்தித் தொடர்பு கொண்டார்; ஆகையால், இந்த யுகத்தில் தகப்பனார் - ஆசாரியர் என்ற கருத்தானது நிலவி வந்தது. தலைமைத்துவம் மற்றும் ஆளுகை என்பது வாரிசுகளான திரளான எண்ணிக்கையுள்ள மக்கள் மீது ஏற்படுத்தப்பட்டதாயிருந்தது, பிதாத்துவத்தின் பொறுப்பானது முதற்பிறந்த மகனுக்குக் கையளிக்கப்பட்டது.*

*"யூதத்துவ" அல்லது "மோசேயின்" என்பது அடுத்து வந்த யுகத்திற்குப் பெயர் ஆகும். சீனாய் மலையில் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட குறிப்பிட்டதொரு நியாயப் பிரமாணத்தின் கீழ் இருந்த தேசத்துடன் தேவன் கொண்டிருந்த உறவின் காலத்தை இது குறிப்பிடுகின்றது (யாத். 20; யோவா. 1:17). விதிக்கப்பட்ட இந்தப் பிரமாண அமைப்பில் லேவி கோத்திரம் என்ற ஆசாரியத்துவ கோத்திரத்திற்கு இடமளிக்கப்பட்டிருந்தது; மோசேயின் சகோதரரான ஆரோன் என்பவர் தான் முதலாவது பிரதான ஆசாரியராய் இருந்தார் (யாத். 28; 29). இந்தப் பிரமாணமானது ஆவிக்குரியது மற்றும் உலகிற்குரியது ஆகிய இருவழி முறைகளிலும் இருந்ததால் வழக்கத்திற்கு மாறானதாக இருந்தது. இது இஸ்ரவேலர்கள் தேவனை ஆராதித்து ஊழியம் செய்வதற்கான விஷயங்களுடன் கூட, இந்தப் புதிய நாட்டிற்கான குடியுரிமைச் சட்டமாகவும் பணி செய்தது. ஆகையால், இது குற்றம், தண்டனை, பொருளாதார*

விஷயங்கள் மற்றும் ஆரோக்கியம், சுகாதார முறைமை ஆகியவை பற்றிய விஷயங்களையும் கூட ஒழுங்குபடுத்தியது.

மோசேயின் நியாயப்பிரமாணமானது இஸ்ரவேல் இனத்திற்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது (யாத். 34:27, 28), அது பூமியின் பெரும்பான்மைக் குடிகளாய் இருந்து, புறஜாதியார் என்று மொத்தமாய் அறியப்பட்ட மக்களுக்கு நடைமுறைப் படுத்தப்படவில்லை. யூதர்களுக்கு மோசேயின் நியாயப் பிரமாணம் அமுலில் இருந்த பதினைந்து நூற்றாண்டுகளின் போது புறஜாதியாருக்குப் பிரமாணம் எதுவும் இருந்ததா என்பது பற்றி வேதாகமம் அமைதி காக்கின்றது, ஆனால் தேவன் மற்ற இனத்தார் மீதும் அக்கறை உள்ளவராய் இருந்தார் என்பதைத் தெளிவான பல நிகழ்ச்சிகள் காண்பிக்கின்றன.[1]

யூதத்துவ யுகத்தின்போது தேவன் புறஜாதியாருடன் கொண்டிருந்த உறவுமுறைக்கான குறிப்புகள் பழைய ஏற்பாட்டு வரலாறு முழுவதிலும் காணப்படுகின்றன. ஆகையால், பிதாக்களின் காலத்தின் அமைப்பு முறையானது கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரையிலும் புறஜாதியாருக்குத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டதாகக் கல்வியாளர்கள் சிலர் கருதுகின்றார்கள்.

"கிறிஸ்தவ" என்பது மூன்றாம் யுகத்தின் பெயராக உள்ளது. இயேசு சிலுவையில் மரித்த பொழுது, அவர் இந்த முழு உலகத்திற்கும் ஒரு புதிய பிரமாணத்தைக் கொண்டு வந்தார். கிறிஸ்தவர்கள், "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின்" கீழ் இருப்பதால், "பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தில்" இருந்து விடுதலையானார்கள் என்று பவுல் உரிமைகோரினார் (ரோமர் 8:2). மேலும் அவர் "கிறிஸ்துவின் பிரமாணத்திற்குள்" இருப்பது பற்றியும் (1 கொரி. 9:21), "கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுதல்" பற்றியும் (கலா. 6:2) கூறினார். "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம்" மற்றும் "ராஜரிகப் பிரமாணம்" (யாக். 1:25; 2:8) என்று யாக்கோபு எழுதினார். நாடு அல்லது இனம் என்ற வேறுபாடு எதுவும் இன்றி, எல்லா மக்களும் இந்தப் புதிய பிரமாணத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்கின்றார்கள். முந்திய அமைப்புகளில் குடும்பங்கள் அல்லது ஒரு நாட்டுடன் தேவன் செயல்புரிந்தது போல் இல்லாமல் இந்தப் புதிய அமைப்பில் தேவன் தனிநபர்களுடன் செயல் புரிகின்றார்.

*கிறிஸ்துவின் இராஜ்யத்தில் புதிதாய்ப் பிறந்து, அவரது பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்ட முதல் மக்களின் மத்தியில் ஏற்பட்ட திகைப்பூட்டும் மாற்றங்கள் பற்றிய அறிக்கைகளை நடபடிகள் புத்தகமானது வெளிக் கொண்டு வருகின்றது. முதலில் அப்போஸ்தலர்கள், மோசேயின் பிரமாணத்திற்கு நன்கு பழக்கப்பட்டிருந்த யூதர்களின் மத்தியில் போதித்தார் கள். பின்னாளில் அப்போஸ்தலர்கள் புறஜாதியாரிடத்தில் பிரசங்கித்தார்கள், அதில் முதலாவதானவர் கொர்நேலியு (அப். 10).*

*தனி நபர்கள் இயேசுவுக்குப் பதில்செயல் செய்கையில், இயேசு கட்டிய சபையில் அவர்கள் தேவனுடன் உறவுமுறை பெற்றிருந்தார்கள் (மத். 16:18). விரைவிலேயே உலகம் முழுவதி லும் சபைகள் பரவத் தொடங்கின.[2] தேவன், தனித்தனியாக மற்றும் கர்த்தருடைய சபைகளாக இருக்கும் தமது பிள்ளை களிடத்தில் இப்பொழுது எவ்விதத்தில் செயல்படுகின்றார் என்பது பற்றிய உள்ளறியும் நோக்கை நடபடிகள் தருகின்றது.*

## *பிராந்திய சபைகள் மற்ற பிராந்திய சபைகளுடன் ஐக்கியம் கொண்டன*

*எருசலேமில் இருந்த முதல் பிராந்திய சபையானது (அப். 2:41-47) மற்ற நகரங்களில் இருந்து தேவனை ஆராதித்த சக கிறிஸ்தவர்களை அடையாளம் கண்டுகொண்டது. சமாரியா வில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு உதவியாக அவர்கள் பேதுருவையும் யோவானையும் அனுப்பினார்கள் (அப். 8:14). எருசலேமில் இருந்த இந்த சபையானது பின்னாளில், தமஸ்கு வில் கிறிஸ்துவுக்கென்று மனமாற்றப்பட்ட தர்சுப் பட்டணத் துச் சவுலை ஏற்றுக்கொண்டது (அப். 9:26-28). செசரியாவில் புறஜாதியாரின் மனமாற்றத்தை எருசலேமில் இருந்த சபை யானது ஏற்றுக் கொண்டது (அப். 11:18), இது புறஜாதியார் மத்தியில் இருந்த தப்பெண்ணம் என்ற பெரும் சுவர் உடைந்து போனதில் ஆதாரமாய் இருந்தது. இதே சபை புறஜாதியாரின் விருத்தசேதனம் பற்றிய கர்த்தரின் முடிவை விளக்கப்படுத்தும் நிருபத்தை தயார் செய்யும் பொழுது அதை, “புதிய*

*ஏற்பாட்டில் உள்ள ஏவப்பட்ட முதலாவது கடிதமாக'' அனுப்பி வைத்தது (அப். 15:22-31). இந்த முடிவானது தெளிவாக ஏவப்பட்டிருந்தது, பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்படுத்தப்பட்டது, மற்றும் அது அப்போஸ்தலர்களின் வாக்களிப்பினால் ஏற்பட்டதின் விளைவாய் அல்ல (அப். 15:28).*

*பஞ்சகாலத்தின்போது அந்தியோகியாவின் கிறிஸ்தவர்கள் எருசலேம் மற்றும் யூதேயா ஆகிய பகுதிகளுக்கு நிவாரண உதவி அனுப்பி வைத்தார்கள் (அப். 11:27-30). அந்தியோகியா வின் சபையானது மத்திய தரைக்கடலினூடே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு ஊழியக்கரர்களையும் கூடப் பயணமாய் அனுப்பி வைத்தது (அப். 13:1-3), மற்றும் மூன்று வருடங்களுக் குப் பின் இம்மனிதர்கள் திரும்பி வந்தபோது, இவர்களிடம் இருந்து அறிக்கையையும் பெற்றுக் கொண்டது (அப். 14:26, 27).*

*கூட்டுறவு மற்றும் ஐக்கியத்திற்கான இன்னொரு எடுத்துக் காட்டானது பின்னாளில் ஏற்பட்ட உபகாரத் தேவையின் காலத்தில் வெளிப்பட்டது. கலாத்தியா, மக்கதோனியா மற்றும் அகாயா ஆகிய இடங்களில் இருந்த சபைகள் பஞ்ச நிவாரண உதவியை யூதேயாவுக்கு அனுப்பி வைத்தன. இந்தக் கொடை களைக் கொண்டுசேர்ப்பதில் பவுல் உதவினார் (அப். 24:17; 1 கொரி. 16:1, 2; 2 கொரி. 8:1; 9:1, 2).*

*அறியப்பட்ட உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த வித்தியாசப்பட்ட (பிராந்திய) சபைகள் ஒன்றையொன்று சககிறிஸ்தவர்கள் என்று அங்கீகரித்துக் கொண்டு, ஒருவருக் கொருவர் உதவி செய்து, ஆதரவு தந்தார்கள், ஒருவருக் கொருவர் ஐக்கியப்பட்டிருந்தார்கள், கர்த்தருடைய ஒரே சபையின் வித்தியாசப்பட்ட பிராந்திய குழுக்களாகத் தங்களை அறிந்திருந்தார்கள். பிராந்திய சபை ஒவ்வொன்றும் உலகளாவிய சபையின் சிறு அளவாய் இருந்தது.*

## பிராந்திய சபைகள் விசேஷித்த மனிதர்களால் வழி நடத்தப்பட்டன

*எருசலேமில் இருந்த முதல் சபையில், தொடக்கத்தில்*

அப்போஸ்தலர்களே நடத்துகிறவர்களாக இருந்தார்கள். போதனையில் மட்டுமின்றி உபகார உதவிகள் விநியோகத்திலும் அவர்கள் சபையை வழி நடத்திச் சென்றார்கள். உபகாரச் செயல்களுக்கான தேவைகள் எழுந்த பொழுது, கிறிஸ்தவர்கள் தங்களின் நன்கொடைகளை, ''அப்போஸ்தலர்களின் பாதத்திலே'' (அப். 4:37) வைத்தார்கள். இப்படிப்பட்டதொரு ஏற்பாட்டை இன்றைய நாட்களில் ஒருவர் சபைப் பொருள்வைப்பரை அல்லது வங்கிக் கணக்கு என்று குறிப்பிடலாம். குழு ஏற்பாட்டிற்கு நிதிகள் தரப்பட்டு, அந்தந்தக் குழுவின் முன்னோடிகளாயிருந்த அப்போஸ்தலர்களின் முடிவுகளின்படி விநியோகங்கள் செய்யப்பட்டன. விநியோகித்தல் என்ற ஊழியத்திலிருந்து உண்மையில் அப்போஸ்தலர்களை விடுவிக்கும்படியான தேவை ஏற்பட்ட பொழுது, சபையின் விசேஷித்த ஊழியர்கள் - பின்னாளில் உதவிக்காரர்கள் என்று அறியப்பட்டவர்கள் - அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்வதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்டார்கள் (அப். 6:1-6). அப்போஸ்தலர்களின் நேரடியான வழிகாட்டுதல்/தலைமைத்துவம் என்பது தற்காலிகமானதாக இருந்தது, ஏனெனில் அப்போஸ்தலர்கள் இருக்கத் தேவையற்ற நிரந்தரமானதொரு வழிகாட்டும் அமைப்பை சபைகளுக்குத் தேவன் வடிவமைத்தார்.

ஒரு சில வருடங்களுக்குள்ளாக, யூதேயாவில் எழுந்த ஒரு பஞ்சமானது அந்தியோகியாவில் இருந்த சகோதரர்களை எருசலேமுக்கு நிதிகள் அனுப்பத் தூண்டியது. இந்த உதவியானது "மூப்பர்களிடத்திற்கு" அனுப்பப்பட்டது (அப். 11:30). பவுலின் முதலாம் ஊழிய முயற்சிகளின் முடிவு பாகத்தில் மூப்பர்களை நியமிப்பதும் உள்ளடங்கியிருந்தது. அவரும் பர்னபாவும் தாங்கள் ஊழியம் செய்திருந்த இளம் சபைகளில் நடத்துனர்களை நியமித்தபொழுது அந்த நடத்துனர்கள் "மூப்பர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள் (அப். 14:23).

முதல் ஊழியப் பயணத்தில் முடிவு மற்றும் விருத்தசேதனப் பிரச்சனை பற்றிய கலந்துரையாடலுக்காக கூட்டப்பட்ட விசேஷ கூட்டத்தின் காலகட்டத்தில், எருசலேமில் அப்போஸ்தலர்களுடன் குறிப்பிட்ட சில மனிதர்கள் நடத்துனர்களாய் இருந்தார்கள் என்பது தெளிவு; அவர்கள் "மூப்பர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள் (அப். 15:2, 4, 6, 22). மெலித்தாவில் பவுல், எபேசுவிலிருந்து வந்த சகோதரர்களுடன் இதயத்தை

இளகச் செய்யும் கண்ணீர் நிறைந்த பிரியாவிடைக் கூட்டம் ஒன்றைப் பெற்றிருந்தார். இம்மனிதர்களை "மூப்பர்கள்" என்று லூக்கா எழுதினார் (அப். 20:17, 28ஐயும் காணவும்). மூன்றாம் ஊழியப் பயணத்தின் முடிவில், நான்கு இளைஞர்களின் பிரார்த்தனையை நிறை வேற்ற உதவும்படிப் பவுலினிடத்திற்கு எருசலேமின் மூப்பர்களிடமிருந்து ஒரு விசேஷித்த வேண்டுகோள் வந்தது (அப். 21:18-25).

இந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் மூப்பர்கள் குறிப்பிடப் படும் பொழுது, கர்த்தருடைய சபையின் பிராந்திய சபைகளில் இருந்த நடத்துனர்களைப் பற்றியே லூக்கா எழுதினார் என்பதை சந்தர்ப்பப் பொருள்கள் காட்டுகின்றன. இம்மனிதர் கள் ''மூப்பர்கள்'' என்று குறிப்பிடப்பட்டார்கள், இவர்கள் அவரது சபைக்கான கர்த்தருடைய நிரந்தரமான வடிவமைப் பில் இருந்தார்கள்.

**அவர்களின் பணிப் பொறுப்புக்களின் பெயர்கள்**

புதிய ஏற்பாட்டில் மூன்று பெயர்கள் இந்த நடத்துனர் களைக் குறிக்கின்றன: "மூப்பர்," "ஆயர்" மற்றும் "மேய்ப்பர்." மிலேத்துவில் பவுல் தமது உரையில் இம்மனிதர்களைக் "கண்காணிகள்" ("bishop"; KJV) என்று அழைத்தார், லூக்காவோ, பவுல் "மூப்பர்களை" வரவழைத்தார் என்று எழுதினார் (அப். 20:17, 18). பவுல் தீத்துவை கிரேத்தாத் தீவில் விட்டுவந்த போது மூப்பர்களை நியமிக்கும்படி கட்டளை கொடுத்தார்; ஆனால் இந்த நடத்துனர்களுக்கு ஆவிக்குரிய தகுதிகளை நிர்ணயிக்கும் விஷயத்தில் இவர் அவர்களை ''கண்காணிகள்'' என்றும் அழைத்தார் (தீத்து 1:5, 7; KJV)[3] பேதுரு தமது சக மூப்பர்களின் ஊழியத்தில் அவர்களுக்குப் புத்தி கூறுகையில், தம்மை "மூப்பர்" என்று அவரே அழைத்துக் கொள்வதுடன், அவர்கள் ஊழியம் செய்யும் மந்தையை மேய்க்கும் பணி அல்லது "மேய்த்தல்" என்பதைச் செய்யும்படியும் கூறினார் (1 பேது. 5:1, 2). இம்மூன்று வார்த்தைகளுமே ஒரே வகையான ஊழியத்தை, ஒரே விதமான பணிப் பொறுப்பை, அப்பணிப் பொறுப்பை நிறைவேற்றும் ஒரே வகைப்பட்ட மனிதர்களைக் குறிக்கப் பயன்பட்டன என்பது தெளிவாகும். அவர்கள் இம்மூன்று பெயர்களாலும் குறிப்பிடப்பட்டார்கள்.

''மூப்பர்'' என்று பெரும்பாலும் மொழிபெயர்க்கப்

பட்டுள்ள *Presbuteros* என்ற கிரேக்க வார்த்தையானது வித்தியாசப்பட்ட வடிவங்களில் எழுபத்தி நான்கு முறைகள் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது நடபடி களில் பத்தொன்பது முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. நடபடிகளில் இரண்டு இடங்களில் இவ்வார்த்தையானது வயது முதிர்ந்த மனிதர்களைக் குறிக்கச் சந்தர்ப்பப் பொருளில் பயன்பட்டுள்ளது, மற்றும் ஏழுமுறைகள் இவ்வார்த்தையானது யூத சமுதாயத்தின் முன்னோடிகளைக் குறிப்பதாயிருக்கின்றது. இருந்தாலும், கர்த்தருடைய சபையின் நடத்துனர்களை குறிப்பதற்கென்றே இவ்வார்த்தையானது நடபடிகளில் மிகவும் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது: இவ்வகை யில் பத்து முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. "மூப்பர்" என்ற வார்த்தையானது அதன் எல்லாப் பயன்பாடுகளிலும் வயதை யும் அநுபவத்தையும் குறிக்கின்ற வார்த்தையாக இருக்கின்றது, ஆனால் கர்த்தருடைய சபையை வழிநடத்தத் தேர்ந்தெடுக்கப் பட்டு நியமிக்கப்பட்ட (ஒரு பிராந்திய சபையில் உள்ள) மனிதர்களின் விசேஷித்த ஒரு குழுவை இப்பெயர் குறிக்கின்ற தெனச் சில சந்தர்ப்பப் பொருள்கள் உரிமைகோருகின்றன. அவர்களுடைய வயது, அநுபவம் மற்றும் ஆவிக்குரிய பக்குவம் ஆகியவற்றால் அவர்கள் சபையில் நடத்துனர்களாக இருக்க முடிந்தது.

"ஆயர்" (மேய்ப்பர்) அல்லது "கண்காணி" (*episkopos*) என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது "மேற்பார்வை செய்ய" மற்றும் "கண்காணிக்க" என்று அர்த்தப்படுவதற்காக இணைந்த கிரேக்க வார்த்தைகளின் கூட்டுச் சொல்லாக உள்ளது. தலைமைத்துவச் சூழ்நிலைகளில் இது வேலையையும், வேலை செய்பவர்களையும் கவனிக்கின்றவர்களைக் குறிக் கின்றது. இவ்வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் பதினொரு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது; ஏழு முறைகள் இது பிராந்திய சபைகளில் இருக்கும் ஆவிக்குரிய அதே நடத்துனர் களைக் குறிக்கின்றது. ஒருமுறை இது அப்போஸ்தலர் ஒருவரின் ஊழியத்தைக் குறிக்கின்றது (அப். 1:20). இது "சந்திப்பின் நாள்" என்பதாக இருமுறையும் (லூக்கா 19:44; 1 பேது. 2:12) மற்றும் ஒருமுறை (KJVயில்) "எச்சரிக்கையாயிருங்கள்" (எபி. 12:16) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சபைகளை வழி நடத்தும் மனிதர்களைக் குறிப்பிடும் பொழுது அம்மக்கள்

குழுவின் செயல்பாட்டை அவர்கள் கண்காணிப்பு செய்ததையே குறிக்கின்றது.

"மேய்ப்பர்" (pastor) அல்லது "ஆயர்" (shepherd) (*poimen*) ஆடுகளைக் கவனிப்பவர்களைக் குறிக்க உருவக நடையாகவும், நேரடியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் இது பயன்படுத்தப்பட்டுள்ள முப்பத்தொன்பது முறைகளில், குறைந்தது பதிமூன்று இடங்களில் இது பூமிக்குரிய ஆடுகளின் மந்தையைக் கவனித்துக் கொள்பவர்களை விளக்குவதாய் உள்ளது. இச்சொற்றொடரானது இயேசுவை ஆத்துமாக்களின் மேய்ப்பராகக் குறைந்தது ஐந்து முறைகள் குறிப்பிடுகின்றது. ஆனால் குறைந்தது ஏழு இடங்களில் இதன் சந்தர்ப்பப் பொருளானது பிராந்திய சபைகளில் நடத்துனர்களாய் இருந்த மனிதர்களை அர்த்தப்படுத்துகின்றது. இவ்வார்த்தையின் வினைவடிவமொன்று மூப்பர்களின் ஊழியத்தை விவரிப் பதற்காக ஒருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது, இது சபையின் முன்னோடிகளுக்கான இச்சொற்றொடர்கள் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளத்தக்கவைகளென்று காட்டுகின்றது (அப். 20:28). நடத்துனர்களாக இருப்பவர்களே, தங்கள் வயது, அநுபவம் மற்றும் ஆவிக்குரிய பக்குவம் ஆகியவற்றின் கருத்தில் "மூப்பர்கள்" ஆகவும் இருக்க முடிந்தது. "மேய்ப்பர்கள்" அல்லது "ஆயர்கள்" என்ற வார்த்தையானது ஆட்டு மந்தையை (எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களை) மேய்ப்பவர்கள் என்ற கருத்தில் பயன்பட்டது. இத்துடன், அந்தக் குழுவின் நலன் களைக் கண்காணிப்பவர் என்ற அர்த்தத்தில் "bishops" என்ற வார்த்தையும் பயன்பட்டது.

இப்படிப்பட்ட திட்டவட்டமானதொரு ஊழியம் அல்லது பணிப்பொறுப்பானது ஆதி சபைகளில் காணப்பட்டதென்பது பவுல் தமது நிருபமொன்றில் "கண்காணிகளுக்கும் உதவிக்காரர் களுக்கும்" (பிலி. 1:1) என்று சேர்த்துக் குறிப்பிடுவதில் காண முடியும். சபையில் நடத்துனர்களின் பணி/ஊழிய முறை மையைத் தேவன் வடிவமைத்தார், "மூப்பர்," "கண்காணி" அல்லது "மேய்ப்பர்" என்ற வார்த்தைகள் அம்முறைமையை விவரிப்பதற்காக ஒன்றுக்குப் பதில் ஒன்றாகப் பயன்படுத்தப் பட்டன. இவ்வசனத்தில் உதவிக்காரர்களைக் குறிப்பிடுவ தென்பது பிலிப்பி சபையின் நடத்துனர்களுடன் விசேஷித்த ஊழியப் பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்

*பட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.*

**அவர்களின் செயற்பங்கு**

*இந்த மூப்பர்கள்/கண்காணிகள்/மேய்ப்பர்களின் ஊழிய மானது மும்மடங்கானதாயிருந்தது. முதலாவது, மூப்பர்கள் வழி நடத்த வேண்டியவர்களாய் இருக்க வேண்டியதாயிற்று. அவர்கள் வாழ்ந்து மற்றும் ஆராதித்து வரும் இடத்தில் உள்ள சபையை ஆளுதல் மற்றும் பராமரித்தல் என்பது அவர்களின் பொறுப்புகளில் உள்ளடங்கியிருந்தது (1 தீமோ. 3:5; 5:17). அவர்கள் முன்மாதிரியாய், போதனை மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றால் ஆளுகை செய்ய வேண்டியிருந்தது (எபி. 13:7, 17).*

*இரண்டாவது, அவர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதாயிற்று. அவர்கள் சரியாக வழிநடத்த தங்கள் சொந்த வாழ்வு மற்றும் நடக்கை ஆகியவற்றில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதாயிற்று (அப். 20:28). இம்மனிதர்கள் தங்களின் பராமரிப்பின் கீழ் இருந்த ஆத்துமாக்களையும் கவனிக்க வேண்டியதாயிருந்தது (எபி. 13:17), மற்றும் ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவர்களாயிருக்கும்படி தாம் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்கிறவர்களாயிருக்க வேண்டும் (தீத்து 1:9).*

*மூன்றாவது, அவர்கள் போஷிக்க வேண்டும். தகுதி வாய்ந்த மனிதர்கள் தங்களின் பராமரிப்பின் கீழ் இருக்கும் ஆத்து மாக்களுக்கு அறிவுறுத்தக்கூடிய வகையில் கர்த்தர் தமது சபையை வடிவமைத்தார் (அப். 20:28; 1 பேது. 5:2). அவர்கள் நேர்மையான அறிவுறுத்தல் கூறும்படியான போதகர்களாய் இருக்க வேண்டியிருந்தது (1 தீமோ. 3:2); மற்றும் எதிர் மறையான கருத்தில், கள்ள உபதேசங்களை எதிர்த்து நிற்பதற்கு அவர்கள் கிறிஸ்துவின் உபதேசங்களைப் போதுமான அளவுக்கு அறிந்த காவலாளர்களாக இருக்க வேண்டியிருந்தது (தீத்து 1:9). அவர்கள் தங்களின் பராமரிப்பின் கீழ் உள்ள சபையின் உறுப்பினர்களைப் பாதிக்கக்கூடிய கள்ள போதகர்களுக்கு வாய்ப்பளிக்க மறுப்பதற்குப் போதிய தைரியம் கொண்டவர் களாய் இருக்க வேண்டியிருந்தது (தீத்து 1:10, 11).*

# முடிவுரை

முதல் நூற்றாண்டு பிராந்திய சபைகள் சுயாதீனமுள்ளவைகளாய் இருந்தன: அவைகள் தங்கள் சொந்த முடிவுகள் மற்றும் விஷயங்களைத் தாங்களே கவனித்துக் கொண்டன. எந்த ஒரு பிராந்திய சபையும் வேறு ஒரு பிராந்திய சபையின் மீது எவ்விதமான கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. இந்த சபைகள் எந்தவொரு டயோசிஸாகவோ, பிரிஸ்பைட்டரியாகவோ, சங்கமாகவோ, சினாடாகவோ அல்லது மறை மாவட்டமாகவோ ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததில்லை. அவைகளுக்கு நாட்டளவில் அல்லது உலகளவில் தலைமையகம் எதுவும் இருந்ததில்லை. அவைகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும் எளிய மக்களின் குழுக்களாகவே உள்ளூர்ப் பகுதிகள் பலவற்றில் இருந்து வந்தன. அவர்கள் யாவரும் ஒரே சுவிசேஷத்திற்குப் பதில்செயல் செய்திருந்தார்கள்; அவர்கள் யாவரும் கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் யாவரும் ஒரே வழிமுறையிலேயே ஆராதித்து, போதித்து மற்றும் ஊழியம் செய்தார்கள். அவர்கள் யாவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் ஒரே "தலை" யின் கீழ் இருந்ததால் இந்தப் பண்பு நலன்களைப் பகிர்ந்து கொண்டவர்களாய் இருந்தார்கள் (கொலோ. 1:18). அவர் எல்லா பிராந்திய சபைகளுக்கும் ஒரே விதமான அறிவுறுத்தல்கள் மற்றும் போதனைகளையே கொடுத்திருந்தார். பல நிகழ்ச்சிகளில்/சந்தர்ப்பங்களில் பிராந்திய சபைகள் ஒன்றுக்கொன்று ஒத்துழைத்து உதவி செய்து கொண்டன, ஆனால் அவைகள் சுயாதீன ஆளுகை அமைப்பு/தன்னாட்சியமைப்பு உடையவைகளாகவே இருந்தன.

ஒவ்வொரு சபையிலும் முன் நடத்திச் செல்லுதலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் ஆவிக்குரிய வகையில் தகுதி பெற்றவுடன் அச்சபையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இம்மனிதர்கள் மற்றும் சபைகளுடன் இவர்கள் கொண்ட உறவுமுறை ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகளில் எப்பொழுதுமே இம்மனிதர்கள் ஒரு குழுவாகத்தான் குறிப்பிடப்பட்டார்கள். ஒரு சபையின் மீது ஒரு மூப்பர் இருப்பது, சில சபைகளுக்கு மேற்பட்டவராய் ஒரு மூப்பர் இருப்பது அல்லது சிறப்பான முக்கிய மூப்பர்

அல்லது தலைமை மூப்பர் என்ற கருத்துக்கள் எதுவும் வேதாகமத்தில் இல்லை/புதிய ஏற்பாட்டில் இல்லை. ஒவ்வொருவருக்கும் சமமான பொறுப்பும், அதிகாரமும் அந்தந்த வழிநடத்தக் கூடிய குழுக்களுக்குள்ளேயே இருந்தன.

மூப்பர்கள் தாங்கள் ஊழியம் செய்த சபைகளில் இருந்த கிறிஸ்தவர்களின் காரியத்தை மட்டுமே வழிநடத்தினார்கள்/ கட்டுப்படுத்தினார்கள். அவர்கள் மற்ற இடங்களில் இருந்த சபைகளின் மூப்பர்கள்மேல் எந்த அதிகாரத்தையும் செலுத்த வில்லை. ஒரு மூப்பரின்மேல் உள்ள மரியாதையானது அவரது சபைக்கு அப்பால் உள்ள மற்ற(கிறிஸ்த)வர்கள் அவரிடம் ஆலோசனை கேட்கச் செய்யலாம், ஆனால் தேவனுடைய திட்டமான வடிவமைப்பானது எந்த ஒரு மூப்பரும் தமது பிராந்திய சபைக்கு வெளியில் அதிகாரம் செலுத்துவதை உள்ளடக்கவில்லை.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த யூதர்கள், விசேஷமாய் இரு ஏற்பாடுகளின் மத்திய காலத்தில் வாழ்ந்த யூதர்கள் செய்தது போல, சபை நடத்துனர்கள் கூடுதலான பிரமாணங்கள் அல்லது பாரம்பரியங்களை எழுதி வைக்க வில்லை.தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த நியாயப் பிரமாணத்துடன் பழங்கால யூதர்கள் தங்களின் பாரம்பரியங் களைச் சேர்த்ததினால்தான் தல்மாத் - இது "மிஷ்னா" மற்றும் "ஜெமரா" என்றறியப்பட்ட இரு பிரிவுகளையுடையது - என்ற தொகுப்பு உருவாயிற்று. இருப்பினும், பல நிகழ்ச்சிகளில் இப்பாரம்பரியங்கள் கர்த்தரால் கடிந்தகொள்ளப்பட்டன (மாற். 7:6-9). சபை நடத்துனர்கள் எந்த ஒரு புதிய சட்டங்கள் அல்லது போதனைகளை அமுல் படுத்தவோ அல்லது சமுதாய நிலைகளின் மாற்றம் பற்றிய கொள்கைகளின் மீது வாக்களிக்கும் அதிகாரம் பெற்றிருக்கவோ முடியாதிருந்தது. கர்த்தருடைய வசனம் மட்டுமே அவர்களின் பற்றுக்கோடாய் இருந்தது. புதிய ஏற்பாட்டின் கருத்துக்களுக்கு/கோட்பாடு களுக்குக் கிறிஸ்தவர்கள் உண்மையாய் இருக்க விரும்பினால், இன்றைய நாட்களிலும் அதே பற்றுக்கோடானது நடை முறைப் படுத்தப்பட வேண்டும்.

சபையின் உறுப்பினர்கள் இந்த மூப்பர்களின் தலைமைத் துவத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர்களை மரியாதை செய்து, அவர்கள் முடிவுகளை உயர்வாக மதித்து, அவைகளை மகிழ்ச்சி

யுடன் பின்பற்ற வேண்டும். இம்மனிதர்கள் கனம் செய்யப் படும்படியான தேவபக்தியுள்ள பண்பும், உயர்தர ஒழுக்கம் நிறைந்த வாழ்வும் கொண்டவர்களாய் இருக்க வேண்டிய தாயிற்று (1 பேது. 5:2, 3). கூடுதலாக, இம்மனிதர்கள் தங்கள் சக மூப்பர்களுடன் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதலுள்ளவர் களாக, பிராந்திய சபையின் மற்ற எந்த உறுப்பினரையும் போலவே இருக்க வேண்டியவர்கள் ஆவார்கள் (எபே. 5:21). முடிவுகள் வித்தியாசப்படும் விஷயத்தில், அவர்கள் சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள வேண்டியிருந்தது (எபே. 4:3), அவர்கள் சுயநலம் அல்லது இறுமாப்புக் கொண்டு அதன் மூலம் எதையும் செய்து விடக் கூடாது. ஒவ்வொருவரும் மற்றவர்களை "தன்னிலும் மிக முக்கியமானவர்களாய்"க் கருத வேண்டும், அதாவது மற்ற மூப்பர்களின் கருத்துக்கள் மற்றும் முடிவுகளை மரியாதை செய்ய வேண்டும் (பிலி. 2:3).

கர்த்தருடைய சபையில் வேறு எவ்வகையான முன்னோடித்துவமும் அறியப்படவில்லை. "தலைமை மூப்பர்," மறை மாவட்ட ஆயர்கள், கார்டினல்கள், போப்புகள் அல்லது அப்போஸ்தலர்களின் பின்வாரிசுகள் போன்ற எவரையும் தேவன் நிலைநாட்டவில்லை. இன்று நாமகரணக் கூட்டங் களில் பொதுவாய்க் காணப்படும் வேறு எந்தப் பணிமுறைமை யையும் அவர் நிலைநாட்டவில்லை. தகுதியுள்ள மனிதர்கள் "பிரதான மேய்ப்பருக்காக" மேய்ப்புப் பணியில் ஈடுபட்டு, அவர்களின் தேவபக்தி மற்றும் ஊழியத்திற்காக அவர் அவர்களுக்கு வெகுமதியளிப்பது என்பதொன்றே கர்த்தரால் வடிவமைக்கப்பட்ட ஆவிக்குரிய அரசாக உள்ளது (1 பேது. 5:4).

தேவனுடைய அரசு செயல்படக் கூடியதாகவே உள்ளது; அதற்குக் கூடுதல் கட்டமைப்பு எதுவும் தேவைப்படுவதில்லை. தேவன் தமது அரசைத் தமது சபையில் செயல்படச் செய்ததின் பதிவேடாகவே நடபடிகள் உள்ளது.

குறிப்புகள்

[1]*புறஜாதியாரின் நாடாய் இருந்த அசீரியாவின் தலைநகர் நினிவே இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இஸ்ரவேலின் தீர்க்கதரிசியான யோனா நினிவேயின் குடிகள் மனந்திரும்பும்படியான வாய்ப்பளிக்க அங்கு அனுப்பப்பட்டார் (யோனா 1:1, 2; 3:1-4), மோசேயின் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்படி அவர்களுக்கு யோனா பிரசங்கிக்க வில்லை, ஏனெனில் அது அவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தப் புறஜாதியார் பாவங்களில் இருந்து மனந்திரும்பும் வாய்ப் பொன்றைத் தேவன் கொடுத்ததாலும், நியாயப்பிரமாணத்தை மீறுதலும் பாவம் என்பதாலும் (ரோமர் 4:15; 5:13; 1 யோவா. 3:4), அவர்கள் தேவனிடமிருந்து வந்த ஏதோ ஒரு பிரமாணத்தின் கீழிருந்தனர் என்று நாம் முடிவு செய்ய வேண்டும். [2]முழு விளக்கத்திற்கு முந்திய பாடத்தைக் காணவும். [3]தீத்து 1:5ல் presbuteros என்பதன் ஒரு வடிவம் பயன்படுகின்றது,* இது KJV, NIV *மற்றும்* NASB *ஆகியவற்றில்* "elder" *என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. தீத்து 1:7ல் episkopos என்ற வார்த்தை பயன் படுகின்றது. இது* KJV*யில்* "bishop" *என்றும்* NIV *மற்றும்* NASB*யில்* "overseer" *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*